# 12. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், அரசாணை எண்.2852 வேளாண்மைத் துறை, நாள் 24.10.1970ன்படி அமைக்கப்பட்டு 24.10.1970 முதல் செயல்பட்டு வருகிறது. விற்பனைக்குழுக்களின் செயல்பாடுகளை முறைப்படுத்துவதும், ஆலோசனைகள் வழங்குவதும் இவ்வாரியத்தின் நோக்கமாகும்.

**1. அமைப்பு**

வேளாண் விற்பனைக்குழுக்களுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இவ்வாரியம் அரசால் நியமிக்கப்பட்ட தலைவரின் கீழ் கீழ்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. (பிரிவு 36. தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டம், 1987)

1. இயக்குநர் / ஆணையர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை.
2. ஆலோசகர், வேளாண்மை விற்பனை (மத்திய அரசு)
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு கழகம்.
4. பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள்.
5. தலைவர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்.
6. தலைமைச் செயலக வேளாண்மை விற்பனை பிரிவிற்கு பொறுப்பு வகிக்கும் துணை செயலர் பதவி நிலைக்கு குறையாத அலுவலர்.
7. 21 அலுவல் சாரா உறுப்பினர்கள் (விற்பனைக்குழுத் தலைவர்கள் / தனி அலுவலர்).



**2. நிதி ஆதாரம்**

விற்பனைக்குழுக்களின் வருவாயில் 15 சதவீதத் தொகை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு விற்பனைக்குழுக்களின் மூலம் பங்குத் தொகை செலுத்தப்படுகிறது. இத்தொகையில் 50 சதவீதத் தொகை விற்பனைக்கூட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், விவசாயிகள் மற்றும் அலுவலர்கள் பயிற்சி செலவினங்களுக்கும் செலவிடப்படுகிறது. மீதமுள்ள 50 சதவீதத் தொகை பணியாளர்களின் ஊதியம் மற்றும் நிர்வாக செலவினங்களுக்கு செலவிடப்பட்டு வருகிறது

**தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய செயல்பாடுகள்**

**3. விவசாயிகள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்**

**3.1. விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பின்செய் நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சி அளித்தல்**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் மூலம் விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகள் மேற்கொள்ள மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் விளம்பரம் மற்றும் பிரச்சார மையங்கள் செயல்பட்டு வருகிறது. விவசாயிகள் பயன்பெறும் வகையில் விளைபொருட்களை தரம் பிரித்து, மதிப்புக்கூட்டி விற்பனை செய்ய ஏதுவாக அறுவடை பின்செய் நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சிகள் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மூலமாக ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

விவசாயிகளிடையே ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ஆற்றப்படும் சேவைகள் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வாயிலாக விற்பனை செய்து அதிக விலை பெற்று பயன்பெற செய்தல், உணவு பதப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்தல் ஆகிய தொழில்நுட்பங்களை இப்பயிற்சியின்

வாயிலாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தல் ஆகியவை இப்பயிற்சிகளின் முக்கிய நோக்கங்களாகும்.

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பிரிவின் மூலம் இரண்டு நாட்களுக்கான அறுவடைக்குப் பின்செய் நேர்த்தி பயிற்சி, அணிக்கு 20 விவசாயிகள் வீதம் 96 அணிகளில் 1920 விவசாயிகள் பயனடையும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 2011–2012ஆம் ஆண்டில், இத்தொழில்நுட்ப பயிற்சியின் வாயிலாக 1400 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் அதிக அளவில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் சந்தை அறிவுத்திறன் பயிற்சி, உணவு பதப்படுத்துதலின் முக்கியத்துவம் மற்றும் விஞ்ஞான முறைப்படி தானியங்களை சேமித்தல் போன்ற வேளாண் வணிகம் சார்ந்த பயிற்சிகள் வாரியச் சந்தை மேம்பாட்டு நிதியிலிருந்து 7000 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

மேலும் இதுபோன்ற பயிற்சிகளை 2012–2013ஆம் ஆண்டில் 30,000 விவசாயிகளுக்கு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2 சேலம் பயிற்சி மையம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் சேலத்தில் செயல்பட்டு வருகிறது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைப் பணியாளர்களின் திறன் மேம்பாட்டு தேவைகளை இப்பயிற்சி மையம் நிறைவு செய்து வருகிறது. இப்பயிற்சி மையத்தின் வாயிலாக துறை அலுவலர்களுக்கு தரம் பிரிப்பாளர் பயிற்சி, புத்தூட்டப்பயிற்சி , காரிஃப் மற்றும் ராபி பருவ பயிற்சி, சந்தை அறிவுத்திறன் பயிற்சி மற்றும் தானிய சேமிப்பு பயிற்சி போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

## 4. தமிழ்நாடு உழவர் மேம்பாடு மற்றும் நலத் திட்டம்

விவசாயிகள் சமுதாயத்திற்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாடு உழவர் மேம்பாடு மற்றும் நலத்திட்டம் என்ற



உயரிய திட்டத்தினை தமிழக அரசு 02.11.1995 முதல் செயல்படுத்தி வருகிறது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலமாக ஆண்டொன்றுக்கு ஒரு மெட்ரிக் டன் மற்றும் அதற்கு மேலும் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்து வரும் விவசாயி / குத்தகைதாரர் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராக சேர்க்கப்படுவர். இத்திட்டத்தில் சேர்ந்த பின்னர் விபத்தின் காரணமாக மரணம் அல்லது பாம்புக்கடியின் மூலமாக மரணமடைந்தால் உதவித் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய், விபத்தின் காரணமாக நிரந்தர உடல் ஊனமுற்று இரண்டு கால்கள் அல்லது இரண்டு கைகள் அல்லது இரண்டு கண்கள் இழக்க நேரிட்டால் உதவித் தொகையாக ரூ. 75,000/–மும், ஒரு கால் அல்லது ஒரு கை அல்லது ஒரு கண் மற்றும் இடுப்பு ஊனமுற்றால் உதவித் தொகையாக ரூ.50,000/–மும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென விவசாயிகள் / குத்தகைதாரர் களிடமிருந்து கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. உறுப்பினர் ஒருவருக்கு உரிய சந்தாத் தொகை ரூ. 10/–ஐ உரிய விற்பனைக்குழுவும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமும் சமபங்காக இத்திட்ட நிதியில் செலுத்துகிறது.

## 5. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண்மை விற்பனைத்துறையின் அறக்கட்டளை

வேளாண் விற்பனை குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும், வேளாண் மற்றும் வேளாண் விற்பனைத் துறை அலுவலர்களுக்கு பயிற்சிகளை வழங்கவும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண்மை விற்பனைத்துறையின் அறக்கட்டளை நிறுவிட தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய சந்தை மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. வாரிய நிதி இருப்பின் வட்டித் தொகையைக் கொண்டு இதுவரை 30 வேளாண் விற்பனை குறித்த ஆராய்ச்சித் திட்டங்களும், வேளாண் விற்பனைத் துறை அலுவலர்களுக்கு 27 பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2012–2013ஆம்

ஆண்டில் இரண்டு ஆராய்ச்சித் திட்டங்களும், துறை அலுவலர்களுக்கான மூன்று பயிற்சிகளும் நடத்தப்பட உள்ளன.

**6. கட்டுமானப் பணிகள்**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பொறியியல் பிரிவின் மூலமாக வணிக வளாகங்கள், உழவர் சந்தைகள், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டிடங்கள், ஊரகக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வேளாண் இடுபொருள் மையங்கள், பணம் வழங்கும் அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உட்புறச் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், நீர்வள நிலவளத் திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் நபார்டு திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் வணிக உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**7. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையறிவுத் திறன் குழு.**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அன்றாட சந்தை நிலவரத்தை விவசாயிகளுக்கு தெரிவித்திட தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் நிதி பங்களிப்புடன் ரூ.44 இலட்சத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையறிவுத்திறன் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழு, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் முக்கிய விளைபொருட்களுக்கான விலை விவரங்களை சேகரித்து, அவற்றை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் எதிர்கால உள்நாட்டு சந்தை மற்றும் ஏற்றுமதிக்கான விலையை முன்னறிவிப்பு செய்கிறது. வெளி மாநில சந்தைகளின் விலை விவரம் மற்றும் விளைபொருட்களுக்கு எதிர் வரும் மாதங்களில் நிலவக்கூடிய விலை விவரங்களைக் கண்டறிந்து ஒழுங்குமுறை



விற்பனைக்கூடங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்கிறது. விலை விவரங்களை அறிந்து விவசாயிகளுக்குத் தெரிவிப்பதன் மூலம், விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களுக்கு நல்ல விலை பெறவும், பருவத்திற்கேற்ப பயிர்களைத் தேர்வு செய்யவும், குறித்த நேரத்தில் விற்பனை செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சேவையை வலைதளம் மூலமும், குறுஞ்செய்திகள் மூலமும் வெளியிட்டு விவசாயிகள் மற்றும் வணிகர்கள் பயனடையும் வகையில் வழங்குகிறது.

தற்பொழுது இந்த உள்நாட்டு ஏற்றுமதி மற்றும் சந்தை அறிவுத்திறன் குழுவின் வாயிலாக விலை விவரங்களை 2200 நீர் உபயோகிப்பாளர் சங்கங்கள், 9600 விவசாயிகள், 4200 வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள் மற்றும் 2 இலட்சம் இஃப்கோ கீரின் கார்டு (IFFCO green card) விவசாயிகள் அறிந்து பயன் அடைந்து வருகின்றனர்.